சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 290/2023

பெயர் : சைனம்மாள்
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் : ஷாதிக்பாட்ஷா
வயது :44
கிராமம் :கொட்டாம்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :வீட்டுக்குடித்தனம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

12.11.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 10.01.2020 தேதியிட்ட காமாட்சி சரோஜா, சூரியநாராயணன், செல்வமணி, பிரேமா என்ற தமிழரசி, பாலகிருஷ்ணன் ஆகியோரிடம் இருந்து நான் பெற்ற கிரைய பத்திரம் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1. சௌந்திரம் கிருஷ்ணசாமி என்பவர் எனக்கு கிரையம் கொடுத்த ஒரு நபரான பாலகிருஷ்ணனுக்கு கொடுத்துள்ள பொது அதிகார பத்திரம் நகல் வா.சா.ஆ.2. 12.01.2021 தேதியிட்ட என் பெயருக்கு பாலகிருஷ்ணன் கொடுத்துள்ள கிரைய பத்திரம் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3 03.02.2021 தேதிய பிழை திருத்தல் ஆவணம் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4. பட்டா எண்.1033, வலசேரிபட்டி கிராமம், புல எண்.55/9B3Cக்குரியது வா.சா.ஆ.5. வீட்டுவரிரசீது நகல் வா.சா.ஆ.6. என்னுடைய இடத்தை தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் அடமானம் வைத்ததற்கான அடமான ஆவணம் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7. எனக்கு கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர், மதுரை அவர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்துள்ள ஆவணம் வா.சா.ஆ.8. 07.07.2023 அன்று மதுரை வடக்கு

மாவட்ட பதிவாளர் அவர்களின் செயல்முறைகள் வா.சா.ஆ.9. நானும், அ.வ.எண்.285/2023 வழக்கின் வாதியான நாராயணன் என்பவரும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தாக்கல் செய்த ரிட் மனுவில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு வா.சா.ஆ.10. அ.வ.எண்.53/1966 தொடர்பான மாவட்ட உரிமையியல் நிதிமன்றம் மேலூரில் இருந்து கொடுக்கப்பட்ட அசல் வழக்கு பதிவேடு நகல் வா.சா.ஆ.11. கிருஷ்ணபிள்ளை என்பவரின் அடங்கல் வா.சா.ஆ.12. பட்டா எண்.896 வலசேரிபட்டி கிராமம் ஒளிநகல் வா.சா.ஆ.13. 22.09.2023 தேதியிட்ட ஜெயஜோதி மற்றும் தெய்வேந்திரன் ஆகியோருக்கு 1ம் பிரதிவாதி மோகன் எழுதி கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.14. சொத்தின் வழிகாட்டு மதிப்பீடு வா.சா.ஆ.15. (மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.12 21:21:41 +0530

Sub Judge
Melur